ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1695/15 - 2011 මාර්තු 01 වැනි අඟහරුවාදා - 2011.03.01

1695/15 ஆம் இலக்கம் – 2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1670/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கணக்காளர் சேவை பற்றிய சேவைப் பிரமாணக் குறிப்பு

**இலங்கை கணக்காளர் சேவைப் பிரமாணக் குறிப்பு - பதவிப் பெயர்களை நிர்ணயித்தல்**

2010.09.10 ஆந் திகதிய 1670/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கைக் கணக்காளர் சேவை பற்றிய சேவைப் பிரமாணக் குறிப்பின் 6.2 பந்தியில் பின்வரும் பதவிப் பெயர்களை 2010.10.06 மற்றும் 2011.02.09 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் உள்ளடக்கப்படுகின்றது. அந்தப் பதவிப் பெயர்கள் 2010.10.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்.

6.2 அனுமதிக்கப்பட்ட பதவிப் பெயர்கள் :

| தரம் | பதவிப் பெயர் |
|---|---|
| (1) தரம் III<br>தரம் II<br>தரம் I | கணக்காளர் அல்லது நிதி அலுவலர்/உள்ளகக் கணக்காய்வாளர் |
| (2) தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவரினால் வகிக்க வேண்டியதாக இனங்காணப்பட்டுள்ள பதவிகள் | பிரதான கணக்காளர் அல்லது பிரதம நிதி அலுவலர்/பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் |
| (3) விசேட தரத்தினைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவரினால் வகிக்க வேண்டுமென இனங்காணப்பட்டுள்ள பதவிகள் | பிரதிப் பிரதம செயலாளர் (நிதி), பணிப்பாளர் நாயகம் மற்றும் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் பதவிகள் |

பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் ஆகிய பதவிப் பெயர்கள் பொது திறைசேரியின் கீழுள்ள திணைக்களங்களில், உரிய பதவிகளின் கடமையின் தன்மை மற்றும் சேவையின் முக்கியத்துவம் என்பவற்றினைக் கவனத்திற்கொண்டு அவ்வாறான பதவிகளுக்கு நியமிக்கப்படும் இலங்கைக் கணக்காளர் சேவையின் அதிகாரிகள் விடயத்தில் பயன்படுத்தப்படுவதாகவும் கவனத்திற்கொண்டு, அவ்வாறான திணைக்களங்களில் கணக்காளர் ஒருவரின்/உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரின் கடமைகளை நிறைவேற்றும் நபர்கள் தவிர்ந்த பொது திறைசேரியின் திணைக்களங்களில் இலங்கைக் கணக்காளர் சேவையின் I, II மற்றும் III ஆம் தரங்களுக்கு மேற்கூறிய பதவிப் பெயர்கள் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்.

6.1 அனுமதிக்கப்பட்ட பதவிகள் மற்றும் பதவியணியின் எண்ணிக்கை.

| அனுமதிக்கப் பட்ட பதவி கள் | அனுமதிக்கப் பட்ட பதவி அணியின் எண்ணிக்கை | பணிகள் |
|---|---|---|
| தரம் III<br>தரம் II<br>தரம் I<br>விசேட தரம் | 1600 | (i) தம்மிடம் குறித்து ஒப்படைக்கப்படுகின்ற விடயங்களை நிதிப் பிரமாணம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து ஒழுங்குவிதிகள், ஏற்பாடுகள் என்பவற்றின் பிரகாரம் நிறுவனத்தின் கணக்கீட்டு முறைமையை முறையாக மேற்கொள்ளல், தீர்மானம் எடுக்கும் செயற்பாடுகளுடன் தொடர்புடைய தகவல்களை வெளியிடல், அதனுடன் தொடர்புடைய கணக்கீடு மற்றும் அதுபற்றிய தகவல்களடங்கிய அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அவற்றினை இற்றைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லல் மற்றும் கிடைப்பனவு, கொடுப்பனவு பற்றிய பணிகளை மேற்கொள்ளல், மதிப்பீடுகளைத் தயாரித்தல், முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினை செயற்படுத்தல், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு உதவுதல், இணைந்த நிறுவனங்களின் கணக்கு அலுவல்கள் தொடர்பாக ஒப்படைக்கப்படும் பணிகள் மற்றும் நிறுவனத்தின் கணக்கீட்டு செயற்பாடுகளுடன் தொடர்புடைய பிற பணிகள்.<br><br>(ii)வினைத்திறனாகவும், வெற்றிகரமான முறையிலும் நிதி முகாமைத்துவ முறையினை செயற்படுத்தல், நிதிசார் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும், நிதித் திட்டமிடலும் வரவு, செலவுத் திட்டமும், கணக்கீடும் தகவல் வழங்கலும், உள்ளகக் கட்டுப்பாடு, சொத்துக்களின் முகாமைத்துவம், கொள்வனவு முகாமைத்துவம், வெளிநாட்டுதவி செயற் திட்டங்கள் பற்றிய நிதி முகாமைத்துவ ஆலோசனைகளும் கண்காணிப்பும், நிதிக்கொள்கைகள் மற்றும் ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்தல், நிதிப் பொறுப்புக்கள் மற்றும் நிதி செயற்பாடுகள் தொடர்பில் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூறவேண்டிய விடயங்கள் தொடர்பாக திணைக்களத் தலைவருக்கு உதவுதல், இணைந்த நிறுவனங்களின் நிதி முகாமைத்துவ வழிகாட்டல்கள், கண்காணிப்பு மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்தல், நிதி முகாமைத்துவ பணியாட்டொகுதிக்கான பயிற்சி. |

பீ. பி. ஜயசுந்தர,
செயலாளர்,
நிதி, திட்டமிடல் அமைச்சு,

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2011, பெப்புருவரி 25.

03-461

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.